FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)
(பா.குபா.ச பிரிவு 173 இன் கீழ்)

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORMS

C 8101935

1. District : மாவட்டம் Virudhunagar PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2026 FIR No: முதஅ எண் 04/2026 Date நாள் 19.06.2026

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்

(ii) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள் u/s 7 (a), 7-A

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 18.06.2026 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 12.00 hrs Time to : நேரம் வரை 20.00 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.06.2026 Time : நேரம் 15.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 19.06.2026 Time : நேரம் 15.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் திருவில்லிப்புத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலகம் மற்றும் ராஜா டிரைவிங் ஸ்கூல், திருவில்லிப்புத்தூர். சுமார் 45 கி.மீ வடமேற்கு மற்றும் 50 கி.மீ வடக்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.சி.லட்சம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.சின்னதிருளாண்டி

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 07.03.1976 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் தனி வட்டாட்சியர்/ மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர் (g) Address : முகவரி தனி வட்டாட்சியர், குடிமை பொருள் வழங்கல், விருதுநகர் தாலுகா, விருதுநகர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1.திரு.சந்திரசேகரன், வட்டார போக்குவரத்து அலுவலர், திருவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம் மற்றும் தனிநபர்கள் 2) திரு.ராம்குமார், உரிமையாளர், ராஜா டிரைவிங் ஸ்கூல், திருவில்லிபுத்தூர் 3) திரு.ராமராஜ், 4) திரு.கலில் ரகுமான்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதமில்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் (ஷே.ஜாஸ்மின் மும்தாஜ், காவல் ஆய்வாளர்) 19.06.2026 அன்று மதியம் 15.30 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் இருந்தபோது, விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.லட்சம் அவர்கள் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனுவையும், அத்துடன் திடீர் இணை ஆய்வு செயல்முறைகள் நாள் 18.06.2026, கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,29,900/-, மற்றும் கைப்பற்றப்பட்ட சான்றொப்பமிட்ட ஆவணங்களின் நகல்கள் ஆகியவற்றையும் இணைத்து 1.திரு.சந்திரசேகரன், வட்டார போக்குவரத்து அலுவலர், திருவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம் மற்றும் தனிநபர்கள் 2) திரு.ராம்குமார், உரிமையாளர், ராஜா டிரைவிங் ஸ்கூல், திருவில்லிப்புத்தூர் 3) திரு.ராமராஜ், 4) திரு.கலில் ரகுமான் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனு பின்வருமாறு.

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

19.6.26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

19.6.26

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. JASMINE MUMTAJ
Rank: நிலை Insp. / ஷே.ஜா.C/VNR.

விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.04/2026 பிரிவு 7 (a), 7-A of the Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

அனுப்புநர் திரு.சி.லட்சம், (50/2026), த/பெ.சின்ன இருளாண்டி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் மாவட்டம். தனி வட்டாட்சியர் (குடிமைபொருள் வழங்கல்), விருதுநகர் தாலுகா, விருதுநகர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர்.அய்யா, பொருள் : விருதுநகர் மாவட்டம் - போக்குவரத்து துறை - வட்டார போக்குவரத்து அலுவலகம், திருவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம் - மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திடீர் இணை ஆய்வு - லஞ்ச பணம் கைப்பற்றியது - நடவடிக்கை எடுக்க வேண்டுவது - தொடர்பாக. நான் தற்போது விருதுநகர் மாவட்டம், விருதுநகர் தாலுகா, குடிமை பொருள் வழங்கல், தனி வட்டாட்சியராக 27.05.2026 அன்று முதல் பணிபுரிந்து வருகிறேன். விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் கடந்த 03.06.2026ஆம் தேதி முதல் விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகவும் இருந்து வருகிறேன். நேற்று (18.06.2026) காலை சுமார் 10.00 மணியளவில் விருதுநகர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள தனிவட்டாட்சியர் (குடிமைப்பொருள் வழங்கல்) அலுவலகத்தில் பணியிலிருந்தபோது, விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலராக பணிபுரிந்து வரும் திரு.சந்திரசேகரன் என்பவர், தனது அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களின் புதிய வாகனத்தை பதிவு செய்வது. வாகன தகுதிச்சான்று வழங்குவது, பேன்சி பதிவெண் வழங்குவது, ஓட்டுநர் உரிமம் வழங்குவது. ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் மற்றும் உரிமையாளர் பெயர் மாற்றம் செய்வது போன்றவற்றிற்காக திருவில்லிபுத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தை பொதுமக்கள் அணுகும்போது. அவற்றை செய்துதர, பொதுமக்களிடமிருந்து ராஜா டிரைவிங் ஸ்கூல் உரிமையாளர் திரு.ராம்குமார் மற்றும் அலுவலகத்திற்கு வரும் புரோக்கர்கள் மூலமாக லஞ்சமாக பணம் வசூல் செய்வதாகவும், அவ்வாறு வசூல் செய்த லஞ்சப்பணத்தை திரு.ராம்குமார் அவரது டிரைவிங் ஸ்கூலில் வைத்திருந்து, அந்த பணத்தை வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.சந்திரசேகரன் கேட்கும்போது, அவரிடம் கொடுப்பதாகவும் கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோளின்பேரில், நான் நேற்று (18.06.2026) காலை 10.30 மணிக்கு விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து விபரத்தை கேட்டு தெரிந்துகொண்டு, விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.ஜாஸ்மின் மும்தாஜ் மற்றும் அவர்களது குழுவினருடன் நேற்று (18.06.2026) காலை சுமார் 11.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தைவிட்டு புறப்பட்டு, திருவில்லிபுத்தூரிலுள்ள சந்தேகத்திற்குரிய ராஜா டிரைவிங் ஸ்கூலின் முன்பு காவலர்கள் இருவரை நியமித்து தொடர் கண்காணிப்பில் இருக்கும்படி அறிவுறுத்திவிட்டு,

கிருஷ்ணன்கோவில், மதுரை கொல்லம் ரோட்டின் கிழக்குபக்கம் அமைந்துள்ள திருவில்லிபுத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு நண்பகல் 12.00 மணியளவில் சென்று இரவு 20.00 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வு சோதனையின்போது, அலுவலகத்திலிருந்த தனிநபர்களான திரு.ராமராஜ் என்பவர் வைத்திருந்த பணம் ரூ.5,900/-, திரு.கலில் ரகுமான் என்பவர் வைத்திருந்த பணம் ரூ.11,300/- ஆக மொத்தம் ரூ.17,200/- பணமானது அவர்களால் முறையாக கணக்கு காட்ட முடியாத பணம் எனவும், வாகனம் தொடர்புடைய பணிகளை செய்து தருவதற்காக வட்டார போக்குவரத்து அலுவலருக்கு கொடுப்பதற்காக சம்மந்தப்பட்ட நபர்களிடமிருந்து பெற்று கொண்டு வந்த லஞ்சப்பணமாக இருக்கலாம் எனவும் கருதி கைப்பற்றப்பட்டது. மேலும் திருவில்லிபுத்தூரிலுள்ள ராஜா டிரைவிங் ஸ்கூலில் இணை ஆய்வு செய்தபோது, மேற்படி அலுவலகத்திலிருந்த இரும்பு மேஜை டிராயரில் வைத்திருந்த ரூ.1,12,700/- பணமானது, ராஜா டிரைவிங் ஸ்கூலின் உரிமையாளர் திரு.ராம்குமாரால் முறையாக கணக்கு காட்ட முடியாத பணம் எனவும், வாகனம் தொடர்புடைய பணிகளை செய்து தருவதற்காக பொதுமக்களிடம் லஞ்சமாக பெற்று, அதனை அவரது அலுவலகத்தில் வைத்திருந்து வட்டார போக்குவரத்து அலுவலர் கேட்கும்போது கொடுப்பதற்காக வைத்திருந்த லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக நேற்று (18.06.2026) நண்பகல் 12.00 மணி முதல் இரவு 20.00 மணி வரை ஒரு செயல்முறை நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டது. மேற்படி தனிநபர்களிடமிருந்து (இடைத்தரகர்கள்) கைப்பற்றப்பட்ட பணம் மொத்தம் ரூ.17,200/- மற்றும் ராஜா டிரைவிங் ஸ்கூலில் இருந்து கைப்பற்றப்பட்ட பணம் மொத்தம் ரூ.1,12,700 ஆக மொத்தம் ரூ.1,29,900/- பணமும் அவர்களால் முறையாக கணக்கு காட்ட முடியாத பணம் என்றும், வாகனம் தொடர்புடைய பணிகளை செய்து தருவதற்காக பொதுமக்களிடம் லஞ்சமாக பெற்று வட்டார போக்குவரத்து அலுவலருக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த லஞ்சப்பணமாக இருக்கலாம் என்றும் தெரியவந்ததால், திரு.சந்திரசேகரன், வட்டார போக்குவரத்து அலுவலர், திருவில்லிபுத்தூர், தனிநபர்களான திரு.ராமராஜ், திரு.கலில் ரகுமான் மற்றும் ராஜா டிரைவிங் ஸ்கூலின் உரிமையாளர் திரு.ராம்குமார் ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் திடீர் இணை ஆய்வு செயல்முறைகள் நாள் 18.06.2026, கைப்பற்றப்பட்ட பணம் மொத்தம் ரூ.1,29,900/-, 1)வட்டார போக்குவரத்து அலுவலகம் திருவில்லிபுத்தூர் பணியாளர்கள் வருகை பதிவேடு-2026-இல் ஜீன் மாதத்திற்கான பதிவுகள் உள்ள சான்றொப்பமிட்ட நகல், 2) வட்டார போக்குவரத்து அலுவலகம் திருவில்லிபுத்தூர் அலுவலர்களின் நடமாட்ட பதிவேடு-2026-இல் 21.05.2026 முதல் 16.06.2026 வரையிலான பதிவுகள் உள்ள சான்றொப்பமிட்ட நகல், 3) வட்டார போக்குவரத்து அலுவலர் வெளியே செல்லும் விவரத்தினை துணை போக்குவரத்து ஆணையர், விருதுநகர் சரகம் அவர்களுக்கு தெரிவித்து தயார் செய்த 18.06.2026 தேதியிட்ட கடிதத்தின் சான்றொப்பமிட்ட நகல், 4) மதுரை இணை

போக்குவரத்து ஆணையர் அவர்கள் திருவில்லிபுத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.சந்திரசேகரனை 18.06.2026 அன்று பிழையாளராக ஆஜராக அறிவுறுத்தி அனுப்பிய குறிப்பாணை (குறிப்பாணை எண்.900/அ3/2025, நாள் 12.06.2026)-இன் சான்றொப்பமிட்ட நகல், 5) பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்த பத்திரத்தின் நகல் ஆகியவற்றையும் சமர்ப்பிக்கிறேன். (sd) சி.லட்சம் (19.06.26) (சி.லட்சம்), மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் மாவட்டம். தனி வட்டாட்சியர் (குடிமை பொருள் வழங்கல்), விருதுநகர் தாலுகா, விருதுநகர் மாவட்டம். Sir, Received the complaint on 19.06.2026 at 15.30 hrs. I have registered a case in Virudhunagar V&AC Cr.No.04/2026 u/s 7 (a), 7-A of the P.C Act 1988 as amended in 2018 on 19.06.2026 at 17.00 hrs (Sd) ஷே.ஜாஸ்மீன்மும்தாஜ் 19/06/26 (S.Jasmine Mumtaj), Inspector of Police, V&AC, VNR.

The original FIR along with original complaint, Joint Surprise Check Proceedings are submitted to the court of the Principal District and Session Judge cum Special Judge for P.C. Act cases. Virudhunagar at Srivilliputhur and copies submitted to the concerned officers.

Sd. M [illegible]
19/6/26.
Inspr | V&AC | VNR.